# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# பாராளுமன்றம்

---

## சேர்பெறுமதி வரி (திருத்தம்)

***2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத்***
***திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

---

*நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சர் அவர்களால்*
*2018, யூலை மாதம் 17 ஆம் திகதியன்று சமர்ப்பிக்கப்பட்டது*

*(2018, யூன் மாதம் 29 ஆம் திகதியன்று வர்த்தமானியில் வெளியிடப்பட்டது)*

பாராளுமன்றத்தால் அச்சிடப்பணிக்கப்பட்டது

---

[ ***256 ஆம் சட்டமூலம்*** ]

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது
கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 23.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இச்சட்டமூலத்தை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

## சட்டப்பயன்பற்றிய கூற்று

**வாசகம் 2 :** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, ஏற்றுமதியை நோக்காகக்கொண்ட கம்பெனிகளினால் குறித்தசில தைத்த ஆடைகளின் உள்நாட்டு விற்பனைமீது வருமதியான தொகையைக் குறைப்பதாகும்.

**வாசகம் 3 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, பணச்சட்டத்தின்கீழ் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தை நிதிசார் சேவைகளை வழங்குகின்ற குறித்துரைக்கப்பட்ட நிறுவனமாக 2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து உள்ளடக்குவதாகும்.

**வாசகம் 4 :** இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 25இ என்னும் பிரிவின் (3) ஆம் உட்பிரிவின் (உ) மற்றும் (ஊ) என்னும் பந்திகளிற் குறித்துரைக்கப்பட்டவாறு செலுத்தப்படற்பாலதான வரித்தொகைக்கான வரிசெலுத்தப்படற்பாலதான காலப்பகுதியை வரையறுப்பதாகும்.

**வாசகம் 5 :** இவ்வாசகம், உல்லாசப்பயணிகளுக்கு வரியை மீளளிப்பதற்கு ஏற்பாடுசெய்வதற்கென முதன்மைச் சட்டவாக்கத்தில் 58அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதாகும்.

**வாசகம் 6 :** இவ்வாசகம், முன்னர் வழங்கப்பட்ட குறித்தசில விலக்களிப்புகளை அகற்றுவதற்கு 2017 ஆம் ஆண்டின் வரவுசெலவுத்திட்ட முன்மொழிவுகளுக்குப் பயன்கொடுப்பதற்கென முதன்மைச் சட்டவாக்கத்திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துவதாகும்.

ச. வ.- ஓ. 70/2016

## 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதி வரிச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

***1***. இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, சேர்பெறுமதி வரி (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டலாம். *சுருக்கப்பெயர்.*

*2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்கச் சட்டத்தின் 22 ஆம் பிரிவைத் திருத்துதல்.*

***2***. (இதனகத்துப்பின்னர் ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 2002 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, சேர்பெறுமதிவரிச் சட்டத்தின் 22 ஆம் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவுக்கான முதலாவது காப்புவாசகத்தின் (அ) என்னும் பந்தியில், ''இலங்கையினுள் அவ்வாறு வழங்கப்பட்ட அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும் இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;'' என்னும் சொற்களிலிருந்து தொடங்கி ''எழுபத்தைந்து ரூபாவாதலும் வேண்டும்.'' என்னும் சொற்களுடன் முடிவடைகின்ற சொற்களுக்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது:-

''இலங்கையினுள் வழங்கப்பட்ட -

(i) அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும், 2016, நவெம்பர் 1 ஆந் தேதிக்கு முன்னர் தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு, இருபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(ii) அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும், 2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன்பின்னர் தொடங்குகின்ற ஆனால் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று அல்லது அதனை உடனடுத்துப்பின்னர் முடிவடைகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு, எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(iii) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்ட, மகளிர் உட்காற்சட்டைகள், குறுகாலுறைகள் மற்றும் பொக்சர் குறுங்காற்சட்டைகள் தவிர்ந்த அத்தகைய ஒவ்வொரு தைத்த ஆடைக்கும், இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு, எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்;

(iv) சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங்காணப்பட்ட, ஆறு எண்ணிக்கையினவான மகளிர் உட்காற்சட்டைகள், குறுங்காலுறைகள் மற்றும் பொக்சர் குறுங்காற் சட்டைகளுக்கு, இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதியன்று தொடங்குகின்ற ஏதேனும் காலப்பகுதிக்கு, எழுபத்தைந்து ரூபாவாதல் வேண்டும்.''.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25அ என்னும் பிரிவு, அதன் (1) ஆம் உட்பிரிவின் (iv) ஆம் பந்தியில், “எவரேனும் ஆளினால், அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் (2003, யூலை 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்)'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “எவரேனும் ஆளினால், அல்லது (422 ஆம் அத்தியாயமான) பணச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கை மத்திய வங்கியினால் (2003, யூலை 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்) அல்லது சொல்லப்பட்ட சட்டத்தின்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதியினால் தாபிக்கப்பட்ட இலங்கை வைப்புக் காப்புறுதித் திட்டத்தினால் (2018, ஏப்பிறல் 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும்)'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலம் இத்தாற்றிருத்தப்படுகின்றது.

*முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவைத் திருத்துதல்.*

**4**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 25இ என்னும் பிரிவு, அதன் (3) ஆம் உட்பிரிவில் இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அவ்வுட்பிரிவின் (உ) என்னும் பந்தியில், “(உ) 2015, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2016, மே 2 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக “(உ) 2015, சனவரி 1 ஆந்

தேதியிலிருந்து, ஆனால் 2016, மே 2 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் மற்றும் 2016, யூலை 12 ஆம் தேதியிலிருந்து ஆனால் 2016, நவெம்பர் 1 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும்'' என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(2) அவ்வுட்பிரிவின் (ஊ) என்னும் பந்தியில், "(ஊ) 2016, மே 2 ஆந் தேதியிலிருந்து தொடங்கும்'' என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக "(ஊ) 2016, மே 2 ஆந் தேதியிலிருந்து, ஆனால் 2016, யூலை 12 ஆம் தேதிக்கு முன்னர் தொடங்கும் மற்றும் 2016, நவெம்பர் 1 ஆம் தேதியிலிருந்து தொடங்கும்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தில் 58அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 58 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுகின்றது என்பதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 58அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:-

"உல்லாசப் பயணிகளுக்கு வரியை மீளளித்தல்.

58அ. (1) (அ) 2018, யூலை 1 ஆம் தேதியிலிருந்து தொடங்குகின்ற காலப்பகுதிக்காக, உல்லாசப் பயணி ஒருவர், அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரொருவரிடமிருந்து எவையேனும் குறித்துரைக்கப்பட்ட பண்டங்களை இலங்கையில் கொள்வனவு செய்துள்ளாரென்றும்;

(ஆ) அத்தகைய பண்டங்களின் பெறுமதி, விதித்துரைக்கப்பட வேண்டியவாறான குறைந்தபட்சப் பெறுமதிக்கு விஞ்சுதலாகவுள்ளதென்றும்; அத்துடன்

(இ) அத்தகைய உல்லாசப்பயணி, அத்தகைய அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரினால்

அவருக்கு வழங்கப்பட்ட வரிப் பட்டியலின்படி அத்தகைய கொள்வனவுகளின் மீதான வரியைச் செலுத்தியுள்ளா ரென்றும்,

அத்தகைய உல்லாசப்பயணி, உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு அல்லது அதற்கென அவரினால் எழுத்தில் அதிகார மளிக்கப்பட்ட எவரேனுமாளின் திருப்திக்குக் குறித்துரைக்கப்பட்ட படிவத்தில் எழுத்திலான உரிமைக்கோரிக்கையொன்றின்மூலம் எண்பித் துள்ளவிடத்து, அத்தகைய உல்லாசப் பயணி, புறப்படுமிடத்திலான சோதனைக்காக அவர் இயைபான பண்டங்களை அதிகாரமளிக்கப்பட்ட ஆளுக்குக் காண்பித்தால் மற்றும் அத்தகைய பண்டங்கள் கொள்வனவு செய்யப்பட்ட தேதியி லிருந்து இரண்டு மாதங்களினுள் இலங்கையிலிருந்து அகற்றப்படுமாயின், உண்ணாட்டரசிறை ஆணை யாளர் தலைமையதிபதி அல்லது அதிகார மளிக்கப்பட்ட ஆள், பந்திகள் (அ), (ஆ) மற்றும் (இ) என்பவற்றில் குறித்துரைக்கப்பட்ட நிகழ்வுகளுடன் திருப்திப்படுவதன் மீது, இலங்கையிலிருந்து பண்டங்கள் அவ்வாறு அகற்றப்படும் நேரத்தில், நூறு ஐஅநா டொலர்களுக்கான ரூபா பெறுமதி யின் அடிப்படையில் கணக்கிடப்பட்டதும் விஞ்சுத லாகச் செலுத்தப்பட்டதுமான வரியின் அத்தகைய தொகையை வெளிநாட்டு நாணயத்தில் அத்தகைய உல்லாசப்பயணிக்கு மீளளிக்கலாம் அல்லது மீளளிப்பதற்கு அவசியமான ஒழுங்கேற்பாடுகளைச் செய்யலாம்.

(2) எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரின் பதிவு எந்த நிபந்தனைகளுக் கமைய செய்யப்படுகின்றதோ அந்த நிபந்தனையை மீறுகின்ற அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனை

யாளர் தவறொன்றைப் புரிகின்றாரென்பதுடன், நீதிவானொருவர் முன்னரான சுருக்க விளக்கத்தின் பின்னர் குற்றத்தீர்ப்பளிக்கப்படுவதன்மேல் ஒரு இலட்சம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன் றுக்கும் அவரது பதிவு இல்லாதாக்கப்படுவதற்கும் ஆளாதலும் வேண்டும்.

*(3)* இருபதாம் பிரிவின் *(1)* ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அத்தகைய குறித்துரைக்கப்பட்ட பண்டங்களைக் கொள்வனவு செய்துள்ள எவரேனும் உல்லாசப்பயணிக்கு அத்தகைய பண்டங்கள் வழங்கப்பட்ட நேரத்தில் எவரேனும் அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளரினால் வரிப்பட்டியலொன்று வழங்கப்படலாம்.

*(4)* இப்பிரிவின் நோக்கங்களுக்காக –

*(அ)* ''அதிகாரமளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாளர்'' என்பது, அதிகார மளிக்கப்பட்ட சில்லறை விற்பனையாள ராக இச்சட்டத்தின்கீழ் பதிவுசெய்யப் படுவதற்கு உண்ணாட்டரசிறை ஆணையாளர் தலைமையதிபதிக்கு அல்லது உண்ணாட்டரசிறை ஆணை யாளர் தலைமையதிபதியினால் அதற்கென அதிகாரமளிக்கப்பட்ட எவரேனுமாளுக்கு விண்ணப் பித்துள்ள எவரேனும் சில்லறை விற்பனையாளர் என்று பொருளாகும்;

*(ஆ)* ''உல்லாசப்பயணி'' என்பது, முப்பது நாட்களுக்குக் குறைவான காலத்துக்கு உல்லாசப்பயணி விசாவின் மீது இலங்கையில் தங்கியிருக்கும் எவரேனும் வெளிநாட்டவர் என்று பொருளாகும்.''.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்துக்கான முதலாம் அட்டவணை, அதன் பாகம் II இல் இத்தாற் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:- முதன்மைச் சட்டவாக்கத் திற்கான முதலாம் அட்டவணையைத் திருத்துதல்.

(1) அப்பாகத்தின் (அ) என்னும் பந்தியில் -

(அ) (i) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப்பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(i) 2016, நவெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து கோதுமை, கோதுமை மா அல்லது குழந்தைகள் பால்மா";

(ஆ) (iv) ஆம் விடயத்தில், "வானூர்திகள் அல்லது உலங்கு வானூர்திகள்," என்னும் சொற்களுக்குப் பதிலாக "வானூர்திகள் அல்லது உலங்கு வானூர்திகள் (இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர்)," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) (v) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(v) 2016, நவெம்பர் 11 ஆந் தேதிக்கு முன்னரான ஏதேனும் காலப்பகுதிக்காக, (காசோலைப் புத்தகங்கள், பருவ வெளியீடுகள், மாதவெளியீடுகள், புதினப் பத்திரிகைகள், தினக்குறிப்புப் புத்தகங்கள், பேரேடு அல்லது அப்பியாசப் புத்தகங்கள் தவிர்ந்த) புத்தகங்கள்; அத்துடன்

சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின் கீழ் இனங்காணப்பட்ட, 2016, நவெம்பர் 11ஆந் தேதியன்று அல்லது அதற்குப் பின்ன

ரான ஏதேனும் காலப் பகுதிக்காக, (புதினப் பத்திரிகைகள் தவிர்ந்த) புத்தகங்கள், மாத வெளியீடுகள், சஞ்சிகைகள் அல்லது பருவ வெளியீடுகள்; அத்துடன்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்கத்தினது அல்லது மாகாண சபையொன்றினது பயன்படுத்தப்படாத அஞ்சல் மற்றும் அரசிறை முத்திரைகள்;".

(ஈ) அப்பந்தியின் (xxii) ஆம் விடயத்தில்–

(i) உபவிடயம் (i) இல், "வெயில் காப்புக் கண்ணாடிகள்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "வெயில் காப்புக் கண்ணாடிகள் (இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர்)," என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(ii) உபவிடயம் (iv) இல், "(அரியப்பட்ட) மரம்;" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "(அரியப்பட்ட) மரம் (இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர்);" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்;

(iii) உபவிடயம் (v) இல், "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் கீழ்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "1979 ஆம் ஆண்டின் 40 ஆம் இலக்க, இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின்கீழ் (இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர்)"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(iv) உபவிடயம் (vii) ஐ நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன்மூலமும்:-

"(vii) 2017, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து பயனுறும் ஏதேனும் காலப் பகுதிக்கு, வலுச்சேமிப்புக் குமிழ்களும் வலுச்சேமிப் புக் குமிழ்களை உற்பத்தி செய்வதற்கான மூலப்பொருட்களும்;";

(உ) (xxvi) ஆம் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனைச் சேர்ப்பதன் மூலமும்-

(xxvii) 2016, நவெம்பர் 11 ஆந் தேதியிலிருந்து சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங் காணப்பட்ட புதுப்பிக்கப்படற்பாலதான மின்வலுத் தோற்றுவிப்புக்கான பொறித்தொகுதி, எந்திரத்தொகுதி அல்லது துணையுறுப்புகள்;

(xxviii) 2016, நவெம்பர் 1 ஆந் தேதியிலிருந்து சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங் காணப்பட்ட மின்சாரப் பண்டங்கள்;

(xxix) 2016, நவெம்பர் 11 ஆந் தேதியிலிருந்து சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங் காணப்பட்ட மருத்துவ எந்திரத்தொகுதி அல்லது மருத்துவச் சாதனங்கள்;

(xxx) 2017, சனவரி 1 ஆந் தேதியிலிருந்து சுங்க நோக்கங்களுக்காக ஒத்திசைவாக்கப்பட்ட வியாபாரப் பண்டங்களின் விவரணம் மற்றும் குறியீட்டு முறைமை இலக்கங்களின்கீழ் இனங் காணப்பட்ட கொதி வாயு பலூன்கள்.".

(2) (அ) அப்பாகத்தின் பந்தி (ஆ) வின் (xi) ஆம் விடயத்தில்-

(i) உபவிடயம் (ஆ) வில், "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் வதிவிட இடவசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர, எவரேனுமாளினால்" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "2016, நவெம்பர் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் ஆனால் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் வதிவிட இடவசதியின் ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர, எவரேனுமாளினால்" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ii) உபவிடயம் (ஆ) வை உடனடுத்துப் பின்வரும் புதிய உப விடயத்தைச் சேர்ப்பதன்மூலமும்:-

"(இ) எவரேனுமாளினாலான ஏதேனும் குத்தகை அல்லது வாடகை தவிர, அத்தகைய வழங்குகை 2019, ஏப்பிறல் 1 ஆந் தேதியன்று அல்லது அதன் பின்னர் இடம்பெற்றிருப்பின் மற்றும் அத்தகைய வழங்குகை-

(i) ஏதேனும் கூட்டாட்சி வீடமைப்புக் கூறின் விற்பனை தொடர்பாக இராதவிடத்து; அல்லது

(ii) ஒரு கூட்டாட்சி வீடமைப்புக் கருத்திட்டத்தின் கூட்டாட்சி வீடமைப்புக் கூறின் வழங்கையாகவிருக்குமிடத்து அத்துடன் அத்தகைய கூறினதும் அக்கருத்திட்டத்தின் ஒவ்வொரு கூறினதும் அதிகபட்ச விலை அல்லது சந்தைப் பெறுமதி பதினைந்து மில்லியன் ரூபாவை, இவற்றுள் எது உயர்வாகவுள்ளதோ அதனை, விஞ்சாத விடத்து.".

(ஆ) (XXX) ஆம் விடயத்தை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

"(XXX) *2016*, நவெம்பர் *1* ஆந் தேதிக்கு முன்னரும் *2016*, நவெம்பர் *22* ஆந் தேதியிலிருந்தான ஏதேனும் காலப் பகுதிக்கும், உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட நகைகள்.";

(இ) (L) என்னும் விடயத்தை உடனடுத்துப் பின்வருவதனை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(Li) மூப்புநோய் மருத்துவவியல் சேவைகள் அல்லது சிறுவர் கவனிப்புச் சேவைகள்;

(Lii) உள்நாட்டுத் தொலைத்தொடர்புத் தொழிற் படுத்துநர்களுக்கு "எக்ஸ்டேர்னல் கேட்வே ஒப்பரேட்டேர்ஸினால்" வழங்கப்பட்ட சர்வதேசத் தொலைத் தொடர்புச் சேவைகள்.".

*(3)* அப்பாகத்தின் (இ) என்னும் பந்தியில்,-

(அ) (XX) ஆம் விடயத்தில், "உதிரிப்பாகங்கள் (*2007.07.17* ஆம் தேதியிலிருந்து பயனுறும்);" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "உதிரிப் பாகங்கள் (*2007.07.17* ஆம் தேதியிலிருந்து ஆனால் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பயனுறும்)"; என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்;

(ஆ) (xxviii) ஆம் விடயத்தில், "திரைப்படம்சார் படம் பிடிக்கும் கருவிகளும், படம்காட்டும் கருவிகளும், பாகங்களும் துணைப்பொருட்களும்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், திரைப்படம்சார் படம் பிடிக்கும் கருவிகளும், படம்காட்டும் கருவிப் பாகங்களும், துணைப் பொருட்களும்" என்னும் சொற்களை இடுவதன்மூலமும்;

(இ) (xxix) ஆம் விடயத்தில், "(2011, சனவரி 1 முதல் பயனுறுவதாக)" என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "(2011, சனவரி 1 முதல், ஆனால் இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர் பயனுறுவதாக)" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன்மூலமும்;

(ஈ) (xxxiii) ஆம் விடயத்தில், "ஏதேனும் வகையினவான கமத்தொழில் விளைபொருட்களை அல்லது தாவரங்களை" என்னும் சொற்களுக்குப் பதிலாக, "இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், ஏதேனும் வகையினவான கமத்தொழில் விளைபொருட்களை அல்லது தாவரங்களை" என்னும் சொற்களை இடுவதன் மூலமும்; அத்துடன்

(உ) (xxxvi) ஆம் விடயத்தில், "முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஆ) என்னும் பந்தியின் (xxxvii) ஆம் விடயத்தில் (ii) ஆம் உபவிடயத்தில் குறிப்பீடு செய்யப் பட்ட குறிப்பிட்ட வீதத்திலான சுங்கத் தீர்வை விதிக்கப் படுவதற்கமைய," என்னும் சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, "இந்த (திருத்தச்) சட்டம் தொடங்கும் தேதிக்கு முன்னர், முதலாம் அட்டவணையின் பாகம் II இன் (ஆ) என்னும் பந்தியின் (xxxvii) ஆம் விடயத்தில் (ii) ஆம் உபவிடயத்தில் குறிப்பீடு செய்யப்பட்ட குறிப்பிட்ட வீதத்திலான சுங்கத் தீர்வை விதிக்கப்படுவதற்கமைய" என்னும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்.".

ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

**7**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.